உ
சிவமயம்

gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ல் ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹூ ஆவணிமீ உகவ (1946 செப்டெம்பர் 6 வெள்ளிக்கிழமை) [இல சரு

## இலக்கியம்

பண்டிதர் கா. பொ இரத்தினம் B. A. (Hons)

இலக்கியம் என்பதியாது? அதனைக் கற்பதன் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வழிகள் யாவை?.... இவ்வினுக்களுக்குரிய விடைகளை நுட்பமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ள வேண்டியது இலக்கியங் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது.

இலக்கியம் எனுஞ் சொல்லின் தோற்றத்தைப்பற்றிப் பல வரலாறுகள் கூறப்படுவதுபோலவே இலக்கியங்கள் இவை என்பதைப்பற்றியும் பல கருத்துக்கள் உரைக்கப்பட்டுள்ளன. பாரதம் இராமாயணம் போன்றனவற்றை இலக்கியம் என்றனர் நச்சினார்க்கினியர். சைனப் புலவர்கள் சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய காவியங்களை இலக்கியம் என வழங்கினர் அந்தாதிகோவை, பிள்ளைத்தமிழ் முதலியவற்றை இலக்கியம் என்பது உலக வழக்கு. இக்காலத்தில் பாட்டுக்களால் மாத்திரமன்றி உரையாலாக்கப்பட்டவற்றையும் இலக்கியமென்று வழங்குகிறோம். ஆரிய மொழியிலும் பாட்டானியன்யவற்றைப் 'பத்திய' மென்றும் உரையாற் செய்யப்பட்டவற்றைக் 'கத்திய'மென்றும், பாட்டும் உரையுமாகிய இரண்டாலும் ஆக்கப்பட்டவற்றைச் 'சம்பு' என்றும் இம்மூத்திறத்தின யாவும் இலக்கியம் என்றுங் கொள்ளப்படுகின்றன. ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலும் பாட்டுரையாகிய இரண்டினாலுமாக்கப்பட்டவற்றையே இலக்கியமென்கின்றனர்.

இனி, இலக்கியம் இதுவென்பது பற்றி ஆராய்ந்துரைத்த மேனாட்டறிஞர்கள் பலர் பல்வேறு கருத்துக்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். 'மக்கள் யாவர்க்கும் பயனளிக்கும் நூல்கள் மாத்திரமே இலக்கியம்' என்று கூறினர் ஹட்சன் எனும் ஆசிரியர். இவருடைய கருத்துக்கு மாறாக, ஒருசிலருக்கு மாத்திரம் பயன்படும் சட்டநூல், தத்துவநூல், சரித்திர நூல் முதலிய பல நூல்களுங்கூட இலக்கியத்தின்பாற்படும் என உரைத்தார் மவுல்டன் எனும் ஆசிரியர். மோர்லி, எமசன், நியூமன், காலைல் முதலிய ஆசிரியர்களுடைய கூற்றுக்கள் மேலே கூறப்பட்ட இருவர் கூற்றுக்களுக்குமிடையில் அமைந்துள்ளன.

இப்படிப்பட்ட பல்வேறு கருத்துக்கள் காணப்படினும் இலக்கியம் இதுவென்பதை மொழிகளின் வரலாற்றினையும் புலவர்களின் கூற்றுக்களையும் பிறவற்றையும் ஆதாரமாகக் கொண்டு நாம் அறிந்து கொள்ளலாம்.

உலகத்திலுள்ள மொழிகளிலெல்லாம் தொடக்கத்தில் பாட்டுருவத்திலேயே சிறந்த இலக்கியங்களை இயற்றினர். காலஞ் செல்லச் செல்ல உரைநடையிலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன தமிழ் மொழியிலும் பல்வகைப் பாவினங்களும் இருக்கின்றனவாகையால் வடமொழியிற்போல் பலஉரை, நடை இலக்கியங்களைத் தமிழ்ப் புலவர்கள் செய்துவைத்திலர். எனினும் உரையும் செய்யுள் வகைகளில் ஒன்றே எனவும் பாட்டுடன் விரவி நூல்களில் பயின்றுளதெனவும் சிலப்பதிகாரம், பெருந்தேவனார் பாரதம் முதலிய நூல்களால் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

ஆகவே தமிழ் மக்களும் பாட்டையும் உரையையும் இலக்கியத்திற்கு உரிய வடிவங்களாகக் கொண்டுளர் என்பது பெறப்படுகிறது. இப்படியாயின் இவ்விரு வடிவங்களினுமுள்ள நூல்கள் யாவும் இலக்கியங்களாகுமா? என்ற வினு எழுப்புவது இயல்பே. இவ் வினுவிற்கு விடை காண முயல்வோம்.

இலக்கியம் ஒரு படைப்பு; பிரமனுடைய ஆக்கற்றொழிலை ஒத்தது. பிரமன், படைக்கின்ற உடம்புகள் அழிந்து போகின்றன. அறிஞர்கள் படைக்கின்ற இலக்கியங்கள் என்றும் அழியாத உடம்பும் உயிரும் உடையன. இலக்கியங்களுக்கு உயிர் பொருளும், உடம்பு சொற்களுமாகும். சிறு குழந்தைகள் மண்ணினால் சிற்றில் இழைத்து விளையாடுவதுபோல் விநோதார்த்தமாகச் சிலவற்றை ஆக்கிவிட்டு அவற்றைச் சிறந்த இலக்கியமென்று கூறிவிட முடியாது. பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல்போற் பல சொல்லாற் பொருட்கிடனாக வல்லோர் அணி பெறச் செய்வனவே இலக்கியம் என்க. உணர்ச்சிப் பெருக்கில், கற்பனைச் செறிவிற், கவிதை வெறியில் திளைத்துத் தம் நுண்மாணுழை புலத்தால், உலகத்தவர்கள் அழகையும் உண்மையையும் நன்மையையுங் கண்டு இன்பமடையத்தக்கதாக இலக்கியங்களை ஆக்குபவர்கள், மிகமிகச் சிலரே இவர்களையே மெய்ப்புலவர்களென நாம் போற்றுகிறோம். இவர்கள் ஒரு காட்சியையோ, கதையையோ கருத்தையோ கூறும்பொழுது அதற்குப் பொருத்தமான உடம்பினைப் படைத்து உயிரினைக் கொடுத்து அதனைப் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் தெவிட்டாத இன்பங் கொடுக்கத்தக்கதாகச் செய்யும் ஆற்றலுடையவர்கள் சிறந்த இலக்கியங்களாகிய இராமாயணம் சிலப்பதிகாரம் முதலியனவற்றில் உடம்பையும் உயிரையும் நாம் கண்டு மகிழ்கின்றோம்.

உயிர் உடல் ஆகிய இவ்விரண்டினுமுள்ள குறைகளாலேயே எல்லா மொழிகளிலும் இயற்றப்படும் நூல்களிற் பல அழிந்தொழிகின்றன. தமிழிலும் எங்கள் கண்முன்னே அழிந்தொழியும் நூல்கள் பலவன்றோ! இப்பொழுது உலகமெங்கும் எல்லா மொழிகளிலும் இலக்கியம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துகொண்டு வருகிறது. எனினும் குறைபாடுடைய, படைப்புக்களும் விரைவாக மறைந்து கொண்டே வருகின்றன.

(வரும்)

## முடியாட்சி வேண்டுமாம்!

### கிறீஸிற் பொதுஜன வாக்கெடுப்பு

கிறீஸ் தேசத்தின் அரசர் ஜோர்ஜ் இங்கிலாந்திலேயே இதுகாறும் இருந்துவருகிறார் இத்தேசத்துக்கு முடியரசு வேண்டுமா? அல்லது முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியை ஏற்படுத்தவேண்டுமா என்பது பற்றிச் சென்ற ஞாயிற்றுக்கிழமை பொதுஜன வாக்கெடுப்பு நிகழ்ந்தது வாக்களித்தவர்களில் 100-க்கு 72 விகிதமானோர் முடியாட்சி வேண்டும் என்றே சம்மதம் தெரிவித்தனர். எனவே ஜோர்ஜ் மன்னர் கிறீசுக்கு மீண்டுவருவார்,

ஆனால் இந்த வாக்கெடுப்பு முறை மிகவும் பிழையாகச் செய்யப்பட்டிருக்கிறது பிரிட்டிஷாரின் படைப் பலத்துடன் அங்கே ஆட்சிபுரிபவர்கள் ஜனநாயகக் கொள்கைகளை நசுக்கிப் பலாத்காரத்தில் இறங்கிவிட்டபடியாலேயே முடியாட்சிக்குச் சாதகமாகச் சிலர் வாக்களித்தனர் என்று

## யார் வென்றார்?

### ஆங்கில-அமெரிக்கரா? ருஷியரா?

ஜப்பானை ஆர் முறியடித்தது?யாருடைய படைப் பெருக்கத்தால் ஜப்பான் தோற்றுச் சரணாகதியடைந்தது. தங்களுடைய அணுக்குண்டால் தான் ஜப்பான் சரணாகதியடைந்தது என ஆங்கிலரும் அமெரிக்கரும் பறைதட்டுகிறார்கள், ஆனால் ருஷியா, தான் ஜெர்மனியை முறியடித்து: ருஷியா ஜப்பானுக்குச் சொந்தமாயிருந்த மஞ்சூரியா, கோறியா என்னும் பிரதேசங்களிற் படைகளை இறக்கிச் சமர் புரிந்திருக்காவிட்டால், ஜப்பான் இவ்வளவு சீக்கிரத்திற் சரணாகதியடைந்திருக்கமாட்டாது என்று சோவியத் பத்திரிகையான "பிரவ்டா" கூறுகிறது.

ருஷியா இந்த விஷயத்தில் ஆட்சேபனை கிளப்பியுள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் கிரீசின் எதிர்காலம் மங்களகரமானதாக வில்லை. உள்நாட்டுக் குழப்பங்களையும் தீவிர அடக்குமுறைகளையும் நாம் எதிர்பார்க்கலாகும்.

## அம்பலமாகின்றன

### அரசாங்கத்தில் நிகழும் ஊழல்கள்

அரசாங்கசபை அங்கத்தவராயுள்ள ஒருவர், பால்வினியோக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தராகவும் கடமை பார்க்கிறார்: அப்படி அவர் செய்வது பெரும் பிழை: என்று இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் பகிரங்கக் கணக்குப் பரிசோதனைச் சபையார் கண்டித்த விஷயம் முன்னமே இப்பத்திரிகையில் வெளிவந்துள்ளதாகும் இதனைக் காட்டிக் கொடுத்தவர் பிலிப் பிரதிநிதி மிஸ்ரர் தசநாயக்காவாகும்.

மிஸ்ரர் தகநாயகா, இந்த விஷயத்தை இவ்வளவுடன் நிறுத்தப் போவதில்லை. அவர் இதுவிஷயமாக இன்னும் பல விஷயங்களைச் சேகரித்து, அரசாங்கத்தில் நிகழும் அக்கிரமங்களையும் ஊழல்களையும் அம்பலத்திற்குக் கொண்டுவர நிச்சயித்துள்ளார்.

சென்ற திங்கட்கிழமை, மிஸ்ரர் தகநாயக்கா, இந்தப் பால்உணவு விநியோக மேற்பார்வையாளரான அரசாங்கசபையங்கத்தவரைப்பற்றி ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின்வருமாறு கூறினர்:

"நான் இந்தவிஷயமான விசாரணைகளை இன்னும் முடிக்கவில்லை இவ்விஷயமாக இன்னும் பூரணமான விபரங்களைத் த வேண்டும் என்று அரசாங்கசபையில் கேட்கப்போகிறேன்.

"ஆனல் என்னவிதமான மறுமொழிகள் கிடைக்கும் என்பதும் எனக்குத் தெரியும் தான். ஆனல், இதனுல் நான் என் கடமையினின்றும் பிறழமாட்டேன் இப்படியான அக்கிரமங்களை எல்லாம் அம்பலத்தில் இழுத்து, இவைபோன்ற சின்னத்தனமான விஷயங்கள் இனியும் நிகழாமல் தடுக்க முயற்சிப்பேன்.

"நான் இவ்விஷயமாக ஆராய்ந்து கண்ட முடிவுகள் வருமாறு -

1 பால் விநியோகச் சாலைகளின் மேற்பார்வை யுத்தியோகத்தர் யாவரும் பிணை கட்டியிருப்ப, இந்த அரசாங்கசபை யங்கத்தவர் மாத்திரம் தாம் செய்த இந்த வேலைக்காகப் பிணைக் கட்டவில்லை,

2 சீனி பால் முதலிய பொருள்கள் யாவும், இவருடைய சொந்த நியதியிலேயே இவர்க்கு அனுப்பப்பட்டன,

3 இவர், அரசாங்கக் கடிதங்களைப் பெறுவதும், அரசாங்கத்துக்குக் கடிதங்களை அனுப்புவதும், அவற்றிற்கு ஒப்பம் இடுவதும், சாதாரணமான சம்பளம் பெறும் உத்தியோகத்தரைப் போலவே செய்து வந்தார்."

மிஸ்ரர் சேனநாயக்காவின் பரிபாலனத்தில் இன்னும் என்ன என்ன விதமான ஊழல்கள் நிகழப்போகின்றனவோ!

### சிங்கப்பூரில் வேலை நிறுத்தங்கள்

சிங்கப்பூரிலும், மலாயாவிலும் அரிசி அளவு விநியோகத்தை அதிகாரிகள் மிகவும் குறைத்து விட்டதால், ஜனங்களுக்கிடையே அதிருப்தி நிலவுகிறது. வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. ரொட்டித் தொழிற்சாலைகளைக் கொள்ளையடிக்காதபடி, அவற்றுக்குப் பாதுகாப்புக்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அரிசி ஏற்றிச் செல்லும்புகைரதங்களைக் கொள்ளைக்காரர் தாக்கி, அவற்றுக்குள் இருக்கும் அரிசி மூடைகளையும் தூக்கிச் செல்கிறார்களாம்.

### இந்தியத் தொழிலாளர் தலைவர் விஜயம்

இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தின் வருடாந்த மகாநாடு இம்மாதப் பிற்பகுதியில் நிகழும். அதிற் பங்குபற்ற பிரபல இந்தியத் தொழிலாளர் தலைவரும், சமதர்மவாதியுமான மிஸ்ரர் எஸ். ஏ. டான்ஜே என்பவர் விஜயம் செய்வார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
ஆவணி மீ உசஉ வெள்ளிக்கிழமை

## இனிச் செய்யவேண்டியது

இலங்கைத் தீவிற்குரிய தேர்தற்பகுதிப் பிரிவுகளை நிர்ணயித்தற்கான விசாரணைச்சங்கத்தார் தாம் தொகுத்த பிரதி நிதித்துவப் பகுதிகளைத் தம்அறிக்கைப் பத்திர வாயிலாகச் சில தினங்களுக்குமுன் வெளியிட்டுள்ளனர்; இதன்படி வட இலங்கைக்குரிய தேர்தற் பிரிவுகளும் வெளிவரலாயின; மேற்படி விசாரணைச் சங்கத்தார் வகுத்த தேர்தற்பகுதிக்காகிய பிரிவுகளின் அமைப்பு இங்குள்ள மக்களுக்கு இணங்கியதாயினும், இணங்காததாயினும், இங்குள்ளமக்கள் "கடலில் மீனுக்கு வலையனிட்டதேநாமம்" என்றுங்கு அந்தப் பிரிவு முறையை இப்போதைக்கு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனதால் அதனையிட்டுச்சிந்தனை செய்வதையும் சிரமப்படுதலையும் இங்குள்ள மக்கள் அறவே தவிர்த்து, சுயராச்சியத்திற்கு அணிமையி லுள்ள மார்க்கமெனச் சொல்லப்படும் இந்தப் புதிய பாராளுமன்றப் பரிபாலன முறையில் தாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதையே தீர்க்கமாக யோசித்து இயன்றவரையில் ஒற்றுமைப்பட்டு உழைப்பதே கடனாகும். இலங்கையிலே தொகையிற் கூடியவர்களாகிய சிங்களரும், தொகையிற் குறைந்தவர்களாகிய தமிழர் இஸ்லாமியர் முதலாம் பகுப்பினரும் உளரென்பது எல்லாருமறிந்த பரம ரகசியம். இப்படியான தொகையிற் கூடிய சாதியினரையும் தொகையிற் குறைந்த பகுப்பினரையுங் கொண்ட இந்த இலங்கை நாட்டில், தொகையிற் கூடியவர்களாகிய சிங்களமக்கள் தொகையிற் குறைந்தவர்களாகிய தமிழர் இஸ்லாமியர் முதலாம் பகுப்பினருடன் சேர்ந்து ஒத்துழைப்பதோ, இல்லையேல் தொகையிற் குறைந்த இவர்கள் தொகையிற் கூடிய சிங்களமக்களுடன் சேர்ந்துழைப்பதோ, அதுவுமில்லையேல், தொகையிற்கூடிய சிங்களர் ஒருங்குதிரண்டும், தொகையிற் குறைந்தவர்களாகிய தமிழர் இஸ்லாமியர் முதலானோர் ஒருங்கு சேர்ந்தும் இரு பகுதியாக உழைப்பதோ என்ற விவகாரத்தில் எழுந்த சந்தேகம் இற்றைவரையில் நீங்கியபாடில்லையெனலாம்; புதிய பாராளுமன்ற முறைப் பரிபாலனந் தொடங்குதற்கு முந்தி இலங்கை மக்கள் எவரும் இந்தச் சந்தேகத்தை நீக்கி ஒத்துழைத்தற்காகிய ஒரு வழியைத் தேடிக் கொள்ள வேண்டுமென்றமைதான் அநுபவம் வாய்ந்த அறிஞருடைய கொள்கையெனலாம். எங்கள் அயல்நாடாகிய இந்தியாவிலே, அந்த நாடு சுயராச்சியத்தையடையுங் காலம் சமீபித்து நிற்கும் இச்சமயத்தில், நடக்கும் நிகழ்ச்சிகளைப் பாடமாகக் கொண்டு இலங்கை மக்களும் இப்படியான சமயத்திலே தவிர்க்க வேண்டியவை எவை கைக்கொள்ள வேண்டியவை எவையென்பன முதலியவற்றைப் படித்துக்கொள்ளலாகும்; பெரிய முறையிலே இந்தியாவிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் ஏனைய நிலைமைகளும் சின்ன முறையிலே இலங்கையிலும் உள்ளனவென்பதை அறிஞரெவரும் ஒப்புக்கொள்வர்.

தொகையிற் கூடிய சாதியினராக, குறைந்த சாதியினராக, எச்சாதியினரும்,பரஸ்பரம் ஏனைய சாதியினருடன் ஒத்துழைக்க விரும்பினும், இல்லையேல் அச்சாதியினர் தம் பகுப்பினர்க்குக் குறை விளைக்கின்றனரெனக் கண்டு மாறுபட்டுழைக்க நேரினும், முதல் தம் சாதியினருக்குள் வேற்றுமை பாராட்டாது, ஏதும் வேற்றுமை அபிப்பிராய பேதம் முதலியன முந்தியுள்ளவெனின் அவற்றை அறவே மறந்து ஒற்றுமைப்படல் வேண்டும். உதாரணமாக தமிழ்ச் சாதியாராகிய நாங்கள் ஏனைய சாதியினருடன் சேர்ந்து உழைக்க வேண்டுமெனினும், பிரிந்து நின்று கருமமாற்ற வேண்டுமெனினும் முதல் எங்களுள் மயிர் தானும் ஊடாடமுடியாத சுவற்ற நெருங்கிய திண்ணிய முறையில் ஐக்கியப்படல் வேண்டும். இந்தக் கொள்கை யொன்றை மறந்து கருமமாற்றத் தலைப்பட்டால் வேறு எச் சாதியாரோடாயினும் நாம் ஒத்தேனும் மாறுபட்டேனும் கருமமாற்றலும் ஈடேறுதலும் இல்லையாம்.

"வெள்ளந் தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து விடுத்தலரிதோ" என்றுங்கு, தமிழ்மக்களை வேற்றுமைகொண்டு அவர்கள் சிதைந்து போகாவண்ணம் தடுத்து ஒருங்கு சேர்த்து ஒரே கொள்கை ஒரேநிலையில் நின்று கருமமாற்றச் செய்தல்தான் அரிது; அவர்களைப் பேதித்துப் பிரித்துவிடுதல் அரியகருமமல்ல; ஆனதால் புதிய பாராளுமன்றத்தில் அங்கத்தவராய் வர நோக்கங்கொண்டுநிற்போர் எவரெனினும், அப்படி நோக்கங் கொண்டு நிற்கும் மற்றையவரைக் கண்டிக்கவும் தூற்றவும் பகைபாராட்டிப் பிரிக்கவும் முயலவொண்ணது; அபிப்பிராயபேதம் புருஷனுக்கும் மனைவிக்கும், பெற்றருக்கும் பிள்ளைகளுக்கும், நண்பருக்கும் சுற்றத்தாருக்கும், எஜமானனுக்கும் பணியாளனுக்கும், எவர்க்கு மிடையிலுண்டு; அபிப்பிராய பேதத்திலும் எவர் சரி எவர் பிழை யென்பதை, அப்படிப் பேதப்படாத பொதுமை வகித்த மூன்றும் பேரே ஒரு அளவிற்குச் சொல்லத் தக்கவராவர். மேலும் பிரதிநிதிகளைத் தேர்தல் செய்யும் விஷயத்திலே, அப்படித் தேர்தல் செய்தனுப்பும் வட்டாரத்திலுள்ள பொதுமக்களின் அபிப்பிராயமே தலைப்பட்டு நிற்குமென்பதைத் தேர்வித்தற்கு [illegible] எப்பொழுதும் [illegible]ளுதல் வேண்டும்; அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பேதிக்க முயலுதல் அவர்களது பிறப்புரிமையைக் கெடுக்க நினைத்தல் போலாகும். ஆனதால் அந்த அந்த வட்டார வாசிகள் தங்களுட் சபை சங்கமென்னு மிவைகளைக் கூட்டி, அச் சபை வாயிலாகவேனுஞ் சங்க வாயிலாகவேனும் தங்கள் பிரதிநிதிகளை ஏகோபித்துத் தேர்ந்து அனுப்புதலாகிய திருத்தமான நிலைமையை யடையும் வரையில், இந்தப் பிரதிநிதித் தேர்தல் பொருட்செலவோடும் சிரமத்தோடும் பிணக்கோடும் இன்னபல இன்னல்களோடுங் கூடியதாகவேயிருக்கும்.

இனி, அரசியல் விவகாரத்திலும் சன சமூக விஷயத்திலும் எச்சமயவாதிகளாயினும் தம்சமயக் கொள்கையைப் புகுத்தவும், சமயாபிமானத்தைப் பாராட்டவு மொண்ணதென்பது பலருடைய கொள்கையாகும்; அது நீதியான கொள்கை யென்பதை நாமும் ஏற்றுக் கொள்ளுவோம். ஆனல் அந்த விவகாரத்திலும் விஷயங்களிலும் இந்தச் சமயக் கொள்கை சமய அபிமான மென்னு மிரண்டும் புகாமல் விடுமோ என்பதுதான் ஆசங்கைக்கிடமாகும். பிரதி நிதியாகத் தேர்ந்து அனுப்பப்பட விருப்பவர் அரசியல் சனசமூக விஷயங்களை வேருகவும், சமயக் கொள்கை அபிமான மென்னுமிவைகளை வேருகவும்வைத்துக்கொள்ளுதல் ஒரு அளவிற்கு முடியும். ஆனல் அவரைத் தேர்ந்து அனுப்பும் வட்டார வாசிகளுட் கற்ருர் கல்லாதார், அறிஞர் அவரல்லார், சமய அபிமான முடையார் அது குறைந்தவர் அறவே யற்றவர் எல்லாரும் உளரல்லரா? அப்படியிருக்க, அவர்களால் தேர்தல் செய்யப்பட்ட பிரதிநிதி தாம் சமய அபிமானத்தை அறவேமறந்து கருமமாற்றுதல் முடியுமோ என்பது சந்தேகத்திற்கிடமாம். இந்தியாவிலே இந்து சமயத்தைக் கைக்கொள்ளுபவர்கள் இந்துக்களென்றும், இஸ்லாம் சமயத்தைக் கைக்கொள்பவர் இஸ்லாமியரென்றும் பகுக்கப்பட்டிருக்கின்றனர்; இப்பொழுது இந்திய நாட்டின் சுயராச்சிய விஷயமாக இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்குமிடையே நிகழுங் கலகம் சமய சம்பந்தமானதோ சாதி சம்பந்தமானதோ என்பதை ஆராய்ந்து தீர்க்கமாயறிந்து கொள்ளுதல் நன்றும்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—115)

**"அநாதளானேன்"**

"மேலும், எங்கள் நாட்டிலுள்ள மகளிரின் ஒழுக்கத்தைக் கெடுத்தற்கேதுவாகிய இந்தத் தொழிலில், நானும் பெண்ணாய்ப்பிறந்தவளாயிருந்து கொண்டு அப்பெண்களை ஈடுபடுத்த எனக்குப் பிரியமில்லை; அல்லாமலும் நான் ஒரேயொருத்தி இப்படியான பிழையான வழியிற் பொருளீட்டுவதனுல் ஆவதென்ன? அன்றியும் நான் அறிந்தோ அறியாமலோ தீவினைகளைச் செய்துவிட்டேன்: அத்தீவினைகளை இனியேனும் ஒழித்து நல்ல வழியை நாட விரும்புகிறேன்; பால்ய வயசோடு கூடிய உங்கள் துறவுவேடம் கண்டவுடனே என் மனசை உருக்கி என்னைப் பச்சாத்தாபப்படச் செய்துவிட்டது; எங்கள் முதலியாருடைய உரிமைக்காரர் சிலர் இப்படியான் பொறுப்பை ஏற்று நடத்துவதற்குப் பிரியமுள்ளவர்களாகவும், செய்யக்கூடிய ஆற்றலுள்ளவர்களாகவும் இருக்கிருர்கள்; அவர்களை அழைத்து அவர்கள் வசம் இந்தத் தாபனத்தை ஒப்புவித்துவிடலாமென்பதுதான் என் ஞேக்கம்; முதலியார் செல்வஞ் செல்வாக்கோடு கூடியவராயிருந்தாலும் அவருடைய சந்ததி வழங்குவதற்காகிய பிள்ளைப்பேறு இல்லாமற் போய்விட்டது: அந்திய காலத்தில் என்னையும் பார்த்துப் பராபரிப்பதற்கு ஆளற்ற ஆநாதளானேன்: ஆனதினுற்ருன், இந்த வாழ்க்கையை வெறுத்து, உள்ள பொருளைத் தானதருமத்திற்செலவிட்டுக்கொண்டுதலயாத்திரை தீர்த்தயாத்திரைசெய்து நல்ல பொழுதுபோக்க உத்தேசித்தேன்; இப்படியானநேரத்திலேதான், அம்மா, இரஞ்சிதம், நீரும் இந்த நல்லவர்களோடு இங்குந்தீர்: உங்களைத் தரிசிக்க வாய்த்ததும் என் பாக்கியந்தான்" என்று நெட்டுயிர்ப்போடு சொல்லி முடித்தாள் அஞ்சுகம். கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அத்தனைபேரும்சிறிதுநேரம் [illegible] சொல்ல முடியாதவர்க[illegible]ளாயினர்.

**"அதுதான் எனக்கும் விருப்பம்"**

பின்னரும் அஞ்சுகத்தம்மாள் இரஞ்சிதத்தைப் பார்த்து, "இங்கே ஆகவேண்டிய ஒழுங்குகளை யெல்லாம் செய்து வைக்கிறேன், இரண்டுநாள் இங்கே தங்கிப்போக முடியுமோ" என்று ஆதரவுடன் வினவ, இரஞ்சிதம் தன்னுடன் வந்த மற்றையோரைக் குறிப்பாகப் பார்த்தாள்; அதனை யவதானித்த விசுவநாதன் "அவர்கள் விரும்புகிறபடியால், இன்றிரவும் நாளைப் பகலும் இங்கேதங்கி நாளைப் பிற்பகல் நாங்கள் புறப்படலாம் என நினைக்கிறேன்' எனலும், மற்றையவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். உடனே அஞ்சுகம் அவர்கள் அங்கு தங்குதற்காகிய ஒழுங்குகளையும் ஸ்நாநம் போசனம் முதலியவற்றிற்காகிய ஆயத்தங்களையுஞ் செய்து வைத்தாள், அன்றிரவு அங்குள்ள ஏனையோர் சயனஞ் செய்தற்காகிய படுக்கைகளை ஒழுங்கு செய்துவிட்டு, அஞ்சுகம் தன்னுடைய சயன அறையில் இரஞ்சிதத்தையும் உடன் கூட்டிக்கொண்டுபோய்த் தன் படுக்கைக்குப் பக்கத்தில் அவளுக்கும் படுக்கையமைத்து "தங்காய், உமக்குப் பிரயாணஞ் செய்த சிரமமுண்டல்லவா, நீர் அலுப்பாயிருந்தாற் படுத்துறங்கலாமே" எனலும், 'அக்கா, என் பிரயாணச் சிரமம் மனக்கவலை யெல்லாம் உங்களைக் கண்ட மாத்திரத்தே காற்றிலகப்பட்ட பஞ்செனப் பறந்துவிட்டன; உங்களுக்குச் சிரமமில்லையானுல், உறக்கம் வரும்வரை உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதேஎனக்கு ஆநந்தமாயிருக்கும்" என்று இதமாகச் சொன்னுள்; "அதுதான் எனக்கும் விருப்பம்" என்று கூறிப் பின்னரும் இரஞ்சிதத்தைப் பார்த்து "தங்காய், கதிர்காமத்தையனிடம் நீர் யாத்திரைபோன வரலாற்றை விபரமாகக் கேட்க ஆசைப்படுகிறேன்" என்ருள் அஞ்சுகம் அதனைக் கேட்ட இரஞ்சிதம் தன் கதிர்காம யாத்திரை விபரத்தைச் சொல்லத் தொடங்கி, தான் வெருகல்கங்கை வெள்ளப் பெருக்கில் அள்ளுண்டமை, இராமச்சந்தி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழல்கள்

## மாண்டவன் மீண்டான்!

### ஆனல் நிரபராதிக்குச் சிறைத்தண்டனை?

இற்றைக்கு 7 ஆண்டுகளுக்கு முன் பாணந்துறைப்பகுதியில் ஒருவன் காணமற் போய்விட்டான். இவனை ஆரோ கொலை செய்திருக்கவேண்டும் என நமது பொலிஸ் அதிகாரிகள் தீர்மானித்தனர்: அதற்சத்தாட்சியாக அவர்களுக்கு, எங்கோ இருந்து ஓர் பிரேதத்தின் கால் துண்டு அகப்பட்டது. இந்தக் கால் துண்டை வைத்துக்கொண்டு, காணமற்போனவன் கொலை செய்யப்பட்டான் என்று பொலிசார் கருதி, ஒரு வாலிபனைப் பிடித்து அவன்மீது கொலைக்குற்றம் சாட்டி, சுப்பிறீம்கோட்டில் மரணதண்டனையும் விதிப்பித்தனர் ஆனல் அவன் இளைஞனகவிருந்தபடியால், மரணதண்டனை ஆயுட்காலச் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவன் இன்னும் சிறையில் இருந்து வருகிருன்.

இது இவ்வாருக, கொலை செய்யப்பட்டான் என்று கருதப்பட்டவன் இன்று மீண்டுவிட்டான். இவன் உண்மையிற் கொலை செய்யப்படவில்லை இவன் 'கொய்கம" (வேளாளச்) சாதியிற் பிறந்தும் வண்ணா வகுப்புப் பெண் ஒருத்தியை விவாகம் செய்தான் இதன்பொருட்டுத் தனது இனசனத்தவர் தன்னை அவமானப்படுத்துவர் என்று அஞ்சித் தனது கிராமத்தை விட்டு ஓடித் தலைமறைவாகத் திரிந்து வந்தான். தனது சுற்றத்தவர்களுடைய கோபம் இதுவரையில் அடங்கியிருக்கும் என்று இப்போது தன் கிராமத்துக்கு வந்திருக்கிருன். இந்த விபரத்தை அரசாங்கசபையில் பாணந்துறைப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் சுசந்தா டி. பொன்சேக்கா வெளியிட்டிருக்கிருர்.

கொலை செய்யப்பட்டான் என்று கருதப்பட்டவன் இன்று உயிருடன் இருக்கிருன்; அவனைக் கொலைசெய்தான் என்ற குற்றத்தின்பால் அநியாயமாகச் சிறைத் தண்டனை அநுபவித்துத் தன் வாணளை வீணளாக்கும் வாலிபனின் கதி என்ன? இந்த அநியாயத்துக்கு யார் பொறுப்பு?

### 17500 தொன் மா

ஆஸ்திரேலியாவில் இருந்து 17500 தொன் மா சென்ற புதன்கிழமை கொழும்பில் இறக்குமதியானது.

## கணக்குப்பரிசோதனை அதிகாரி வெளியிடும் விபரங்கள்

சேர் ஒலிவர் குணத்திலகா, இப்போதுள்ள ஸ்தானத்துக்கு வரமுந்தி ஊர்ப் பாதுகாப்பு அதிகாரி என்ற பதவியிலிருந்தார். அவருடைய பகுதியிற் பண விஷயமாகப் பல ஊழல்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று இப்போதுள்ள கணக்குப் பரிசோதனை அதிகாரி மிஸ்ரர் அலென் ஸ்மித் தெரிவிக்கின்றுர்.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது, ஊர்ப் பாதுகாப்புப் பகுதியின் விஷயமாக 697 ஆட்சேபனைக் கடிதங்கள் கணக்குப் பரிசோதனைப் பகுதியால் அனுப்பப்பட்டிருந்தனவென்றும், அவற்றுள் ஒன்றுக்காவது சமாதானம் கிடைக்கவில்லையென்றும் கணக்குப் பரிசோதனை அதிகாரி அரசாங்கசபைக்கு முறையிடுகிருர்.

ஊர்ப்பாதுகாப்புப்பகுதி ஒருஆண்டுக்கு முன்னேயே ஒழிக்கப்பட்டுவிட்டது. இவ்வளவு காலமாயும், அப்பகுதியில் உள்ள அதிகாரிகள் தாம் செலவழித்த பணத்துக்குக் கணக்கை முறைப்படி காட்ட ஏன்பின்னிற்கின்றனர் என்று தெரியவில்லை.

பெருந்தொகையான பணம் அரசாங்க அநுமதியின்றி ஊர்ப்பாதுகாப்பதிகாரியினற் செலவழிக்கப்பட்டிருப்பதை கணக்குப் பரிசோதனை அதிகாரி சுட்டிக்காட்டிக் கண்டிக்கிருர் 1942 - 1943-ம் ஆண்டுக்குரிய செலவுகளில் ரூபா 77228-09 செலவழிந்த விதமும், 1943 - 1944 இல் ரூபா 2430-14 செலவழிந்த விதமும் எப்படி என்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லை இப்பத்திரங்களை அனுப்பும்படி எத்தனையோ முறை கேட்டும், குறித்த அதிகாரி அனுப்பியபாடில்லை.

இனி, உத்தியோகத்தரை நியமிக்கும விஷயத்திலும் ஊர்ப் பாதுகாப்பதிகாரி சர்வாதிகாரமாக நடந்து கருமம் ஆற்றித் தம் எண்ணப்படி தமக்கு விருப்பமானவர்களை நியமித்திருக்கிருர் என்று கணக்குப் பரிசோதனை அதிகாரி குற்றப்சாட்டுகிருர்

## உஜ்ஜீவிக்கவழி

நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா<br>
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு<br>
புலர்வதன் முன்அலகிட்டு, மெழுக்குமிட்டு<br>
பூமாலை புனைந்து ஏத்தி, புகழ்ந்துபாடி<br>
தலையாரக் கும்பிட்டு, கூத்துமாடி<br>
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்<br>
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ! என்றும்<br>
ஆரூரா என்றென்றே அலறுநில்லே.

—அப்பர்

# இனி ஆயத்தம்!

## சமதர்மிகள் புறப்பட்டுவிட்டார்கள்

தேர்தற் ரெகுதி நிர்ணயச்சபை தனது அறிக்கையை இப்போது வெளியிட்டதுதான் தாமதம், இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகள், வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலுக்கு ஆயத்தம் செய்து ஆரவாரிக்கத் தொடங்கிவிட்டன.

இப்போது பிரதானகட்சியாயுள்ள ஐக்கிய தேசியச்கட்சி இன்னும் தன்னுடைய அபேட்சகர் அட்டவணையை வெளிப்படுத்தவில்லை. ஆனல் அடுத்த வாரம் அந்த அட்டவணை வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட மூன்றுகட்சிகள் இப்போது இலங்கையில் உண்டு. ஒன்று ரூஷியாவிலே லெனின் போதித்த சமதர்மக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு உலக சமதர்ம இயக்கத்துடன் இலங்கையும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும் என்பது. அதன் தலைவர் டக்ரர் கொல்வின் R. டி. சில்வா ஆவர்.

இக்கட்சி கேகாலை, மஸ்கேலியா, நுவரெலியா, பண்டாரவளை, டெகியோவத்தை என்னும் தோட்டக் காட்டுப் பகுதிகளில் தனது அபேட்சகரை நிறுத்த முடிவுசெய்து, அந்த அபேட்சகரது பெயர்களையும் வெளியிட்டிருக்கிறது. இக்கட்சி ஏனைய ஸ்தானங்களுக்கும் தனது அபேட்சகரை நிறுத்துமாம்,

இரண்டாவது கட்சியான சமதர்மக்கட்சி இப்போது கொழும்பு நகரசபைத் தெரிவில் சில அபேட்சகர்களை நிறுத்தித் தனது பலத்தையும் செல்வாக்கையும் பரீட்சிக்க விரும்புகின்றது. இக்கட்சியின் அபேட்சகராக, பாராளுமன்றத் தேர்தலுக்கு எவரும் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை.

மூன்றுவதுகட்சியான லங்கா சமசமாஜக் கட்சி 26 பேரைத் தெரிவு செயதிருக்கிறது. மீதி 74 இடங்களுக்கும் பின்னர் அபேட்சகர்களைத் தெரிவு செய்யுமாம் இந்த 26 பேரில் 17 பேர்தான் கட்சியங்கத்தவர்கள். மீதி 9 பேரும் கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைக்க ஆயத்தமாயுள்ளவர்கள். இந்த 9 பேரில் பருத்தித்துறைப்பகுதிக்கு நியாயதுரந்தரர் ஸ்ரீ வி. தர்மகுலசிங்கம் அவர்களும் ஒருவராவர். இவர் பருத்தித்துறைப் பகுதிக்கு ஓர் அபேட்சகராக நிற்பாராம்.

வேறு வேருக, இச்சமதர்மிகள் கருமம் ஆற்றினுலும், பாராளுமன்றத்தில் ஒரே கட்சியாக நின்று தொண்டு ஆற்றுவர் என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது.

### சிங்கள சினிமா

பிரபல சிங்கள நடிகரான மிஸ்ரர். லடி றணசிங்கா, ஓர் புதிய சிங்களப் படக்காட்சிதயாரிப்பதற்காகச்சென்னைக்குப் போயிருக்கிருர்.

## முஸ்லீம்களின் அச்சம்!

### தொகுதி நிர்ணயச் சபை அநியாயஞ் செய்துவிட்டதாம்

தொகுதி நிர்ணயச்சபை நிர்ணயித்துள்ள தேர்தற்ரெகுதிகள் அமைப்பு முஸ்லீம்களுக்குப் பாதகம் விளைத்துள்ளது என்று முஸ்லீம் தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இதனை மிஸ்ரர் சேனநாயக்காவும் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளுகிருர்.

யாழ்ப்பாணத் தொகுதிகளில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு தொகுதியையாவது விசாரணைச் சபை ஒதுக்கி வைக்காமல் விட்டது சரியல்ல என்னும் கருத்துப்பட தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி டக்டர் இ. எம். வி. நாகநாதன் கூறுகிருர். எது எப்படியிருந்த போதிலும், நியமன ஸ்தாபனங்களில் ஒன்றையாவது, தாழ்த்தப்பட்டோர்க்குத் தேசாதிபதிவழங்கவேண்டும்என்றும் அவர் கூறுகிருர். இன்னும், தொகுதிகள் பிரிக்கப்பட்டமுறை திருப்திகாமாயில்லையென்று அவர் குறைகூறுகிருர்.

வடமாகாணத் தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ள முறை சாலவும் சிறந்ததென்று உள்நாட்டு மந்திரி ஸ்ரீமான் மகாதேவா அபிப்பிராயம் கூறுகிருர்.

குறித்த சபையின் சிபாரிசுகளின்படி தங்களுக்கு அநீதி விளைக்கப்பட்டதாக முஸ்லீம்கள் கருதினல், சிங்களத் தொகுதிகளில் சில முஸ்லீம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுமாறு நாம் வழிவகைகள் செய்யவேண்டும். முஸ்லீம்களின் அச்சத்தையும் அவநம்பிக்கையையும் போக்க அதுதான் வழி என்று சுகாதார மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ். டி. சில்வா அபிப்பிராயம் தெரிவிக்கிருர்.

## வெங்காயம் விலை குறைகிறது

வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை இருத்தல் 12 சதம். ஆனல் கொழும்பில் இன்று, வெங்காயம் இருத்தல் 5 சதமாக விற்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலே இந்த ஆண்டில் பெருந்தொகையான வெங்காயம் விளைவிக்கப்பட்டன. தினம் ஒன்றுக்கு 1000 அந்தர் வெங்காயம், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது. இப்படிப் பெருந்தொகையான வெங்காயம் முன்னெரு போதும் யாழ்ப்பாணத்தில் விளைவிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

### மிஸ்ரர் தகநாயக்கா

இப்போது பிபிலைப் பிரதிநிதியாக இருக்கும் மிஸ்ரர் W. தகநாயக்கா சமசமாஜக்கட்சி ஆதரவில், மீண்டும் அத்தொகுதிக்கே ஓர் அபேட்சகராக அடுத்துவரும் பாராளுமன்றத்துப் பொதுத்தேர்தலில் நிற்பாராம்.

# 3-வது மகா யுத்தம்

## வல்லரசுகளின் ஆசையை ரூஸ்வெல்ற் கண்டித்தார்

இப்போது நடந்து முடிந்த கோரமான யுத்தத்துக்குக் காரணம் என்ன? இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்தர் என்னும் அதிகார வெறி பிடித்த சாதியாருடைய பேராசை தான் காரணம் என்று, காலஞ்சென்ற அமெரிக்க பிரஜாதிபதி ரூஸ்வெல்ற் கருதினர் என்று அவருடைய மகனகிய மிஸ்ரர் எலியற் ரூஸ்வெல்ற் என்பவர் தாம் தம் தந்தையாரைப்பற்றி இப்போது எழுதியுள்ள ஓர் நூலிற் குறிப்பிடுகிருர். மிஸ்ரர் எலியற் மேலும் கூறுவதாவது:

"இந்தப் பேராசை பிடித்த வல்லரசுகளாலேயே அமெரிக்கரில் ஆயிரக் கணக்கானேர் யுத்த களங்களில் உயிர்விடுகின்றனர் என்று எனது தந்தையார் கருதி, 1943ம் ஆண்டில் எனக்குக் கூறியுள்ளார். இது மாத்திரமன்றி, எனது தந்தையார் தான் கொண்டுள்ள இந்த அபிப்பிராயத்தைப் பிரிட்டிஷ் பிரதமமந்திரி மிஸ்ரர் சேர்ச்சிலுக்கும் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துள்ளார். ஓர் நாடு அடிமை நாடுகளை வைத்திருந்து, அவற்றின் இரத்தத்தை உறிஞ்சும்வரை, இப்படியான யுத்தங்களும் நடந்துதான் தீரும்: எனவே உலகிலே அடிமை நாடுகளை வைத்து அவற்றைச் சுரண்டும் தொழிலை வல்லரசுகள் விடவேண்டும். இல்லையேல் மூன்றுவது மகாயுத்தம் நிச்சயமாகவே ஆரம்பமாகும் என்று என் தந்தையார் சேர்ச்சிலுக்குக் கூறினர்."

## மத போதனை அவசியம்

### என்கிருர் சேர். வைத்தியலிங்கம்

சென்றவாரத் திறுதியில் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கான புதுக் கட்டிடத்துக்குரிய அத்திவாரக் கல்லை, அரசாங்கசபைத் தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி நாட்டினர்

பாடசாலைகளில் சமயம் ஓர் பாடமாக இருக்க வேண்டும். இளைஞர்களது மனத்திலே சமய உணர்ச்சியைப் புகட்டுதற்கு இத்தகைய கல்லூரிகள் அவசியம் வேண்டும் என்று சேர் வைத்தியலிங்கம் தம் பிரசாரணத்திற் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# சீமந்துத்தொழிற்சாலை

## அதனால் நன்மை கிடைக்கமாட்டாதா?

ஐயா,

தங்கள் 16-3-46ல் வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில், காங்கேசன்துறைச் சீமந்துத் தொழிற்சாலையைப்பற்றி "சென்ரினல்" என்னும் புனைபெயருடன் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தவிஷயம் மொழிபெயர்த்துப்பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த விஷயத்தின் நோக்கம் அதை வாசிக்கும் ஒவ்வொருவர்க்குந் தெற்றெனப் புலப்படும். நோக்கத்தை வைத்துக்கொண்டு அதற்குத்தக விஷயத்தைத் திருபபிக்கொள்வதற்குக் கெட்டித்தனம்வேண்டுந்தான். ஆனால் கேட்கிறவர்களெல்லோரும் ஒப்புக்கொள்வார்களென நினைப்பது அறிவின்பாற்பட்டதன்று. இந்தச் சென்ரினல் எழுதியிருக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கமாக, "கெடுவல் யானென்பதறிக தன்னெஞ்சம், நடுவொரீஇ யல்லசெயின்" என்னுந் தேவர் வாக்கையும் மனதிலே யிருத்திக்கொண்டு ஆராய்ந்தால், சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் நில்லாது விஷயத்தை வரைந்திருக்கிறாரென்பது தெளிவாகின்றது. முதலாவது காங்கேயன்துறைச் சீமந்துத் தொழிற்சாலை ஆங்கிலேய நிபுணர்களின் அறிக்கையின்படி வந்ததென்கிறார். இந்தத் தொழிற்சாலையினால் நயம்பெறுவது வடமாகாணமல்ல, இலங்கை முழுவதுமே என்கிறார். பானை சட்டி முதலியன செய்வதற்கு சங்கானை முதலியவிடங்களிலே போதிய களிமண்ணிருக்கின்றதென்கிறார். பருத்தி செய்வதற்கு மன்னார்ப்பகுதியைச் சுட்டுகின்றார். இலங்கைப் பொருளாதார நிலையைப் பெருக்க இந்த வடமாகாணத்திலே எத்தனையோ பொருட்களெல்லா மிருக்கின்றனவென்றுங் கூறுகின்றார். சிங்களமந்திரசபையார் செய்வார்களோவென்று மாசங்கிக்கிறார். நிபுணரது அறிக்கையினாலும், இலங்கைப் பொருளாதார நிலை சிறப்படையுமென்று மந்திரசபையார் சிந்தித்ததாலும் சீமந்துத்தொழிற்சாலை காங்கேயன்துறையிலே ஏற்பட்டதென்று விவாதிக்கின்ற இவர் ஏனைய பொருளாதார நிலைக்குரிய தொழிற்சாலைகளேற்படாவென்று ஏன் சந்தேகிக்கவேண்டும். அவ்வவற்றிற்குரிய நிபுணர்கள் வந்து இவை இவை இன்ன இன்ன இடங்களிலே ஏற்படுத்துவதே சரியென்று அறிக்கையிட்டுப் போனால் உடனே சிங்கள மந்திரசபையார் ஏற்படுத்திவிடுவாரே. நாமேன் பிரதிநிதிகளை அரசாங்கசபைக்கு அனுப்பவேண்டும். இந்தச் 'சென்ரினல்'தானேதோ செய்துவிட்டேனென்று திரு. நடேசன் வானளாவப் புளுகுகிறார் என்று பத்திரிகையிலேன் வரையவேண்டும். இரண்டாவதாக, இந்தச் சென்ரினல்' சிங்களப் பெருமக்களுக்குள் ஒரு பெருமகனாக விளங்கும் திரு. கொறயா என்பவர் யாழ்ப்பாண மக்களை ஏமாற்றப் பொய்யும் புளுகும் கொட்டிவிட்டுப் போய்விட்டாரென்று அவரிலுந் தாவுகிறார். இவருடைய கூற்றுக்களெல்லாம் நடுநிலவா பயனில் சொற்களெனத்தெரிப்பதற்கு இவண் இரு கட்டாக்களை வரைவாம். இந்தச் சீமந்துத் தொழிற்சாலையினால் வரப்போகிற 40 லட்சம் ரூபா இலங்கைக்கு நயமா வட மாகாணத்துக்கு நயமா என்று வினவுகின்ற இந்தச் சென்ரினல் இந்தத் தொழிற்சாலைக்குச் செலவழியப்போகிற 85 லட்சம் ரூபாவும் வடமாகாணப்பொக்கிஷத்திலிருந்து எடுத்ததா? அல்லது இலங்கைப் பொக்கிஷத்திலிருந்து எடுத்ததா என்று சிறிது சிந்தித்தாரா? தேயிலை றப்பர்த் தோட்டங்களிலிருந்து வருகிற வருமானம் இலங்கை முழுவதுக்குஞ் செலவழிகிறதா? அல்லது அந்தந்த மாகாணங்களுக்குமாத்திரஞ் செலவழிகிறதா?என்று ஆலோசித்தாரா? அந்தத் தேயிலை றப்பர்த் தோட்டங்களிலுத்தியோகத்திலமர்ந்திருப்பவர்கள் பெரும்பாலார் எமது யாழ்ப்பாண மக்களென்பதை இந்தச் சென்ரினல் அறியவில்லையா? இவைகளையும் இவை போன்றவற்றையும் எமது சென்ரினல் சிந்தித்திருந்தால் காங்கேயன்துறைத் தொழிற்சாலையைப்பற்றி யெழுதியே யிருக்கமாட்டார். இப்படிப்பட்ட விஷயங்களை எழுதுவதினால் சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கு மிடையிலுள்ள நட்பும் ஒற்றுமையுங் குறையும் அப்படிக் குறைவதினால், இலங்கை அடிமைக் குழியிலிருந்து வெளியேறுவது இப்போதைக்கில்லை. திரு. கொறயா வென்பவர் இந்தத் தொழிற்சாலையினால் இந்தத் தேசத்திற்கு என்று சுட்டியது இலங்கையேயன்றி வடமாகாணத்தையல்ல. வேறு யாரிடத்திலாவது இலங்கையைப் பிரித்தெண்ணுகிற விடல்பிருந்தாலும் திரு. கொறயாவிடத்தில் அது கிடையாதென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். அவர் சிறு பராயந்தொட்டு ஒரு தேசியவாதி. வகுப்புவாதியல்ல. இப்படிப் பட்டவர்களிடத்திலே தோஷங் கற்பிப்பதினால் நல்லவர்களிடத்திலும் பகையை உண்டாக்குவதுமன்றி எமக்கு எதிர்காலத்திலே வரப்பாலனவாகிய நன்மைகளையும் துரத்துவது போலாகும். தொழிற்சாலைகள் உள்ள இடங்களே பெரும்பட்டணங்களாக உலகத்திலே விளங்குவன. பூமிசாஸ்திரங் கற்கிற மாணவர்களுக்கும் தெரிந்த உண்மை. அதையறியாது, எங்கள் அபிமானி, என்ன இரண்டு மூன்று தேநீர்க்கடைகளும் மூன்று நாலு கள்ளுக் கொட்டில்களும் இந்தச் சீமந்துத் தொழிற்சாலைக்குப்பக்கத்திலே உண்டாகும் என்று யாழ்ப்பாணத்தவர்களுக்கு மௌட்டிகம் கற்பிக்கின்றார். இந்தச் சீமந்துத் தொழிற்சாலையினால் காங்கேசன்துறை ஒருபெரும் நகரமாய் வரவும் முடியும் தொழிற்சாலை மூற்றுப்பெறாமல் ஒழிவான நிலையை அடையவுங் கூடும். எல்லாம் சனங்களுக்கும் துரைத்தனத்தாருக்கும் இடையேயுள்ள நட்பையும் ஒத்துழைப்பையும் பொறுத்தன. ஆகையினால் விஷயங்களை ஆராய்ந்து எழுதுவதும் வெளிப்படுத்துவதும் நல்லதென்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

மு. சிற்றம்பலம்

ஏழாலை, 1-9-46

## பிரியாவிடை

அரசாங்கத்தில் 35 வருடகாலம் சேவை செய்துவிட்டு ஓய்வு பெற்றுக்கொள்ளுபவரும் சமீபகாலம்வரை தற்காலிக கணக்குப் பரிசோதனைப்பகுதி அதிகாரியுமாயிருந்த ஸ்ரீ கே. கனகரத்தினத்துக்குப் பிரியாவிடை அளிப்பதற்காக நாளை சனிக்கிழமை மாலை "ஆடிட்டர் ஜெனரல்" காரியாலயத்தில் ஒரு விருந்துபசாரம் நடத்தப்படும் அவ்வமயம் அரசாங்கசபைத் தலைவர், மந்திரிகள் முதலான பல பிரமுகர்கள் பிரசன்னமாகி யிருப்பார்கள் ஸ்ரீ கனகரத்தினத்தின் உருவப்படமொன்றும் திறந்து வைக்கப்படும் விருந்துக்குப்பின் சங்கீதக் கச்சேரிகள் நடத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

## கொழும்பு நகரசபையில் சமதர்மிகள்

கொழும்பு நகரசபைக்குச் சமீபத்தில் நிகழவிருக்கும் பொதுத் தேர்தல்களில் சமதர்மிகளையும் அபேட்சகராக நிறுத்துவது என்று இலங்கைச் சமதர்மக் கட்சி நிர்ணயித்திருக்கிறது.

## 'சுவதரும போதம்'

யாழ்ப்பாணம் பிராமண சமாஜத்தினரால் வெளியிடப்படும் "சுவதரும போதம்" என்னும், சிறு புத்தக வடிவான பத்திரிகையின் இரண்டாம் இதழ் வரப்பெற்றோம்; இதன்கண் இரட்டையர், வருண தருமம், பிராமணன் வியாகரணம் கற்றல் அவசியம் என்பது முதலான அரிய வியாசங்கள் அறிஞர்களால் எழுதப்பெற்று வெளிவந்துள்ளன; இக்காலத்திலே சைவ ஆலயங்களில் நிகழும் நித்திய நைமித்திகங்களிற் பெரும்பான்மையும் நிகழும் தவறுகளையும் அக்கிரமங்களையும எடுத்துக் காட்டிக் கண்டித்து, அவை நடக்க வேண்டிய விதிகளையும் முறைகளையும் இன்ன பிறவற்றையும் இந்தச் சிறந்த பத்திரிகை வாயிலாகத் தெருட்டிக் குருவகுப்பினரையும் ஏனைய வகுப்பு மக்களையும் நன்னெறியில் ஒழுகச் செய்வதற்கு இப்பத்திரிகை ஏற்ற சாதனமாகு மென்பது எமது எண்ணம்; எமக்கு உதவிய பிரதியை உவந்து ஏற்றும். இவ்விதழிற் குறிப்புந் திரட்டும் என்ற தலையங்கத்தின் கீழ் வெளிவந்த குறிப்புக்களுள், இராமநாதபுரம் சமஸ்தான மகா வித்துவானாக விளங்கிய ஸ்ரீ ரா. இராகவ ஐயங்காரவர்களின் பிரிவைப்பற்றிய குறிப்பை வெளியிட்டுள்ளோம்.

"இந்த மாதம் (ஆனி) உஎஉ (11-7-46) வியாழக்கிழமை. இராமநாதபுர ஸம்ஸ்தான மஹா வித்துவான் பாஷாகவிசேகரர் ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்கள் இறைவன் திருவடிநீழலை யடைந்தனர். இவருக்கு வயது 76. தமிழ்த் தாயின் தவப்புதல்வராகிய இவ்வித்துவ சிரோமணியை யிழந்தமையினால் தமிழகம் இன்று வறுமை யெய்தியது. வடமொழியுஞ் செந்தமிழும் முறைப்படி கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். ஆங்கிலமும் அடிநாளில் சிறிதளவு கற்றுப் பின் அதனைக் கைவிட்டுத் தமிழ்க்கலை வளர்ச்சி யொன்றுமே தன் சீவியத்தின் குறிக்கோளாகக் கொண்டு தம் வாழ்நாள் முழுதும் உலையாது உழைத்துத் தமிழ்ப்பணி யாற்றிய தமிழ்ப்பெருந்தகையை அந்தண சிரேஷ்டரை இன்று இழந்து துன்புறுகின்றோம்.

தமிழ்த்தாய்க்கு இவர் இயற்றிய தொண்டுகள் மிகப் பலவாகும். இவர் சேதுபதி ஸம்ஸ்தான வித்துவானாக விருந்த தம் தாய் மாமன் முத்துஸ்வாமி ஐயங்காரிடம் தமிழ் கற்றுப் புலமை நிரம்பப்பெற்று அவருக்குப் பின் ஸம்ஸ்தான வித்துவானாக விளங்கினர். அக்காலத்தில் பாஸ்கர சேதுபதியைத் தூண்டி நாலாவது சங்கமாக மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவுவித்தவர் இவரே. தமிழ்ச் சங்கத்தின் சார்பில் "செந்தமிழ்" எனப் பெயரிய உயரிய மாதப் பத்திரிகையைத் தொடங்கச் செய்து அதற்கு ஆசிரியராக விருந்து பல ஆண்டுகளாக அதனை ஆராய்ச்சி வளம்பெற நடாத்தினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் தலைமை வகித்துத் தமிழாராய்ச்சி நடத்தியவர். கம்பராமாயணம் முதலிய இலக்கியப் பாடல்களை எடுத்துச் சுவைததும்பப் பிரசங்கித்தலிலும் பதசாரம் சொல்லுதலிலும் இவருக்கு இணையானவர் மிகச் சிலரே. இவர் செய்த நூல்கள் இவரது இருமொழிப் புலமைக்கும் பரந்த நூலறிவிற்கும் நுண்மாணுழைபுலத்திற்கும் சான்றாக விளங்குவனவாகும்.

# பலஸ்தீன் கலவரம்!

## சமாதானத்துக்கு வழியில்லை

பலஸ்தீன விஷயம் பிரிட்டிஷாருக்குப் பெரும் தலைவலியைக் கொடுக்கிறது. அங்கே சமரசஞ் செய்ய ஆற்றும் முயற்சிகள் யாவும் பிரதிகூலமடைகின்றன. ஓர் வட்டமேசை மகாநாடு கூட்டி இப் பிரச்சினையைத் தீர்க்க இப்போது இங்கிலாந்து முடிவு செய்திருக்கிறது. ஆனால் ஜெருசலேம் "முப்தி" யாயிருந்து ஜெர்மனியருக்கு உளவாளியா யிருந்த மதகுரவரை அம் மகாநாட்டிற் பங்குபற்ற அழைக்கவேண்டும் என அராபியர் கேட்கின்றனர். இங்கிலாந்து அது முடியாதென மறுக்கிறது. இன்னும் பலஸ்தீனத்தைத் துண்டுபோடும் பிரச்னையை அந்த மகாநாட்டிற் கொண்டு வரக்கூடாது; மூன்றுவது பலஸ்தீனத்திற்குப் பூரண சுயராச்சியம் அளித்துவிட்டுப் பிரிட்டிஷர் வெளியேறிவிட வேண்டுமென்று இப்படியான நிபந்தனைகளை அராபியர் விதிக்கின்றனர் மற்றைப் பாகத்தில், யூதரும் தம் கொள்கைகளிற் பிடிவாதமா யிருக்கின்றனர். பலஸ்தீனத்தில் யூதர்க்குத் தனி இராச்சியம் அமைத்துத் தரவேண்டும், வட்டமேசை மகாநாட்டுக்கு யூதப் பிரதிநிதிகளாக எவரையும் அனுப்ப, யூதரின் மகா ஸ்தாபனத்துக்குப் பூரண அதிகாரம் இருத்தல் வேண்டும் என்று யூதர் கேட்கிறார்கள்.

இங்கிலாந்து, இந்த இரண்டு கட்சிகளும் விதிக்கும் நிபந்தனைகள் நீதியற்றவை என்றும் தன்னால் இணங்க முடியாதன என்றும் கருதுகின்றது.

இந்த நிலைமையில் பலஸ்தீனத்தில் சமாதானம் எப்படி நிலவப்போகிறது? பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னுடைய பழைய பிரித்தாளும் கொள்கையை இனியும் அநுசரிப்பதற்குத்தான். இந்த நிலையைத் தானே ஆக்கியுள்ளது என அரசியல் வாதிகள் கூறுகின்றனர்.

## விவாகம்

நிகழும் ஆவணிமாசம் 12ந் திகதி புதன்கிழமை யிரவு நிகழ்ந்த மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில் போதனை அரசினர் தமிழ்ப்பாடசாலை ஆசிரியர் திரு. சின்னையா ஆறுமுகம் அவர்கட்கும், உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஆ. கந்தையா அவர்களது சிரேட்ட புத்திரி செல்வி புவனேசுவரிக்கும் மணமகளில்லமாகிய இடைக்காடு 'ஈசுவரி வாச'த்தில், பல சுற்றமித்திரர் பெரியோர் சமுகத்தில் விவாகம் இனிது நிறைவேறியது.

தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களும் பெற்று, இன்புற்று இனிது வாழும் வண்ணம் அகில லோக மாதாவாகிய புவனேசுவரியின் திருவருள் முன்னிற்பதாக.

### தானவரவு

மேற்படி விவாக மங்கலம் நிகழ்ந்த போது இந்துசாதனத்திற்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 5 பெற்றும்.

மனேஜர்.

## மட்டுவில் வடக்கில் "ஸ்ரீ வேற்பிள்ளை வாசகசாலை"

சாசாலை — மட்டுவில் இந்துவாலிப சங்கத்தாரின் முயற்சியால், இந்த ஆவணி மாதம் 23 உ ஞாயிற்றுக்கிழமை மாலை "ஸ்ரீ வேற்பிள்ளை வாசகசாலை" யென்னும் பெயருடன் ஒரு வாசகசாலை நவமாகத் தாபிதம்பெறுமெனவும், அச்சமயத்தில் டக்ரர் S. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகிப்பரெனவும், அறிஞர் சிலர், அரிய விஷயங்களைப் பேசுவார்களெனவுந் தெரிவிக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### பம்பாய்க் கலகம்

பம்பாயில் ஆரம்பமான கலகம் இப்போது அடங்கி வருகிறது. ஏறக்குறைய 150 பேர் இறந்தனர். 300 பேர் காயமுற்றனர். பொலிசாரும் இராணுவத்தினரும் ஜரூராகக்காவல் புரிந்து காடையர்களைப் பிடித்துச் சிறையில் வைக்கின்றனர்.

●

### ஹிந்துமகாசபைக் காரியதரிசி சிறை

வங்காள ஹிந்துமகாசபைக் காரியதரிசிவங்காளத்தில்உள்ளமுஸ்லிம்லீக் அரசாங்கம் சிறையாக்கியிருக்கிறது. அவர்வகுப்பு கலவரத்தைத்தூண்டக் கூடியவிதமாகநடந்தார்என்பதேகுற்றச்சாட்டு. ஆனுல் இந்த வகுப்புக்கலவரங்களைத் தூண்டிவிட்டவர் முஸ்லிம்லீக் தலைவர்கள்தான் என்பதை அகில உலகமும் ஒப்புக்கொள்ள வங்காளத்தில் உள்ள முஸ்லிம் லீக் அரசாங்கம் தன்னுடைய சாயத்தைக் காப்பாற்றுதற்காக இந்த முறையைக் கைக்கொண்டிருப்பதால் உலகம் ஏமாந்துவிடமாட்டாது.

●

### காடைத்தனத்துக்குப் பணியமாட்டேன்

இந்திய மத்திய அரசாங்கத்தில் சேர் ஷாபத் அகமத்கான் நியமிக்கப்பட்டதனுல், ஓர் சில முஸ்லீம்கள் ஆத்திரமடைந்து, அவரைக் கொல்லச் சதிசெய்தனர். அவர் தனியே சிம்லாவில் உலாவி வரும்போது, நாலு காடையர் அவரைக் குத்தி 7 இடங்களிற் படுகாயப்படுத்தினர் அவர் இப்போது ஆஸ்பத்திரியிற் குணமடைந்து வருகிருர். அவர் இன்னும் இரண்டொரு தினங்களில் பூரண சுகமடைந்து இந்திய அரசாங்கத்தின் கல்வி மந்திரியாகக் கடமையாற்றப் போவார். ஆஸ்பத்திரியில் அவரை ஓர் பத்திரிகை நிருபர் கண்டார். "இப்படியான காடைத்தனத்தால் நான் அஞ்சுவேன் என ஒழுக்கநெறி கெட்ட சிலர் எண்ணுவரேயானுல், அது பகற்கனவு; நேர்மாருக, இந்தக் காடைத்தனத்தால் என்னுடைய தீர்மானம் இன்னும் வ்திரமாகிவிட்டது. மரணம் நேர்ந்தாலும் நான் என் தாய்நாட்டுக்குச் சேவைபுரிவதில் பிறழமாட்டேன்" என்று சேர் ஷாபத் அப்பத்திரிகை நிருபர் மூலமாகத் தம் நாட்டு மக்களுக்கு ஓர் செய்தி விடுத்தார்.

●

### கொடியிழுக்கவில்லை!

மத்திய அரசாங்கத்தை நேரு ஸ்தாபித்தவுடன், சுதந்திரக் கொடியை இழுத்து, காரச்சியிலேயே பாகிஸ்தானை நிறுவுவதென்று சிந்து முஸ்லிம்லீக் தலைவரான கஸ்தார் என்பவர் அன்று அதிகம் பேசினுர். வங்காளப் பிரதம மந்திரியும் அப்படிப் பேசி நடந்த விஷயங்கள் என்ன என்பது யாவரும் அறிந்துள்ளதாகும். சிந்து மாகாணத்தில் இற்றைவரை முஸ்லிம் லீக்கர்கள் பாகிஸ்தான் கொடியை இழுக்கவில்லை. நேர்மாருக, குறித்த கஸ்தார் என்பவர் இப்போது ஜனங்கள் என்ன நேர்ந்தபோதிலும் பலாத்காரத்தில் இறங்கக்கூடாது என்றும், சமூகஒற்றுமை ஆவசியகம் வேண்டற்பாலது என்றும் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

●

### லக்கூர் முஸ்லீம்களின் வாய்ப்பேச்சு

பாஞ்சாலத்தில் உள்ள சில முஸ்லீம்கள், ஜின்னுசாய்புவின் ஆஞ்ஞையைக காத்துக்கொண்டிருக்கின்றனராம் நேரடிப் போராட்டந் தொடங்குவதற்கு: ஆனுல் ஜின்னு இதுவரை தமது ஆஞ்ஞையைப் பிறப்பிக்கவில்லை.

●

### இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு

சர்தார் பலதேவ்சிங் இன்னும் இராணுவ மந்திரிப்பதவியை ஏற்கவில்லை. பாஞ்சாலத்தில் அவர் வகித்திருந்த மந்திரி வேலையைப் பாரம் கொடுத்தபின்னரே அவர் மத்திய அரசாங்கத்தின் மந்திரிப் பதவியை ஏற்பார். அதுவரை பண்டிதர் நேருவே இராணுவ வேலைகளைப் பார்ப்பார். அவர் சென்ற செவ்வாய்க்கிழமை இராணுவக் காரியாலயத்துக்குச் சென்று இராணுவ சம்பந்தமான சம்பாஷணைகள் நிகழ்த்தினுர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

●

### மகாத்மாவின் நன்றி

சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த பிரார்த்தனைக் கூட்டத்தில், மகாத்மாகாந்தி, இந்தியாவுக்குப் பூரண சுயராச்சியம் கிடைக்கும் காலம் சமீபித்துவிட்டது என்றும், இதுகாறும் பிரிட்டிஷார் என்ன செய்திருநதபோதிலும், இப்போது அவர்கள் தங்களது பழைய கொள்கைகளை மாற்றி அதிகாரத்தைத் தேசத் தலைவர்களிடம் ஒப்புவிக்க முன்வந்தமைக்காக அவர்களுக்கு நன்றி பாராட்டவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

## ஜெர்மனியில் உள்ள சம்ஸ்கிருத நூல்கள்

### அவற்றைப்பெற இந்தியாவின் முயற்சி

ஜெர்மனியர் விஞ்ஞானத்திலாயினுமாக, வேறெவ் வாராய்ச்சித் துறையிலாயினுமாக,நன்குமுன்னேறியதற்குக் காரணம், அவர்கள் கீழ்நாட்டுக் கலைபாராச்சியில் தீவிரமாக ஈடுபட்டமையேயென்பது அறிஞர் கருத்து இப்போது நடந்து முடிந்த யுத்தத்துக்குமுன், ஜெர்மனியிலே பல சம்ஸ்கிருதப் புத்தகங்களும் ஏட்டுச் சுவடிகளும் இருந்தன. இவற்றைக் காலந்தோறும், இந்தியாவில் இருந்து ஜெர்மனியர் பெற்றனர் என்ப. ஜெர்மனி இப்போது யுத்தத்தில் முறியடிக்கப்பட்டுவிட்டது. அதன் பொருள்களை வல்லரசுகள் பலவிதத்தாலும் சிதைத்து வருகிருர்கள். அங்கேயுள்ள விலைமதித்தற்கரிய சம்ஸ்கிருத நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் மீண்டும் இந்தியாவுக்கே அனுப்ப வேண்டும் என்று இந்திய அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டது. ஜெர்மனியர் மற்றும் நாடுகளிடமிருந்து சூறையாடி, களவாடிய பொருள்களைத்தான் அந்தந்த நாடுகளுக்குக கொடுக்கலாமேயன்றி, இப்படியானவற்றை யுத்த நட்ட ஈட்டுப் பொருள்களாகக் கொடுக்கமுடியாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறிவிட்டது. ஆனுல் அவற்றை இப்போது ஜெர்மனியில் அவற்றின்சொந்தக்காரராயிருப்பவர்களிட மிருந்து விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

குறித்த ஏட்டுச்சுவடிகளையும் நூல்களையும் சேகரித்து, அவற்றுக்கான விலையைக்கொடுத்து, மீண்டும் அவற்றை இந்தியாவுக்குக் கொண்டுவர, இப்போது இந்திய அரசாங்கம் முயற்சி செய்கிறது.


## தேவை

ஒட்டுமடம் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. சம்பளம் 60 ரூபா பிணைப்பணம் 300 ரூபாய், விண்ணப்பம் காரியதரிசிக்கு 15 9-46 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

K. K. காசிப்பிள்ளை,
காரியதரிசி.

T. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்,

4-9-46. Mis 164 6, 10


## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரன் தன்னை மாளாவண்ணம் வெள்ளத்திலிருந்து மீட்டமை, கதிர்காமத் தலத்தில் அவன் நோய்வாய்ப்பட்டமை, தான் அவனைப் பரிகரித்தமை, அவனையும் தன்னையும் பார்த்து அத்தலத்திலுள்ள கற்பகனுர் சொல்லி ஆசீர்வதித்து விபூதி வழங்கியமை முதலிய சகல வரலாற்றையும் ஒளியாமல் தன் மனமும், கேட்டுக்கொண்டிருந்த அஞ்சுகத்தின் உள்ளமும் உருகும்படி சொல்லி முடித்தாள். பயபக்தியோடு கேட்ட அஞ்சுகந்தம்மாளும் தன் கைகளைக் கூப்பி, தென்திசையைப் பார்த்தவண்ணம் கண்களில் நீர் ததும்ப "அப்பனே! கதிர்காமத்தையா! பொல்லாப் பாதகியாகிய என்னையும் உன் சந்நிதிக்குக் கூப்பிடும் நாளுண்டா" என்று கூறியவண்ணஞ்சிறிதுநேரம் முருகனைத் தியானித்தாள், அவள் பின்னரும் இரஞ்சிதத்தை அன்புடன் பார்த்து,"தங்காய்,இங்கு வந்திருக்கும் இராமச்சந்திரனென்பவரெனிலோ, ஒரு உத்தமர்; கல்வியறிவொழுக்கமுடையவர்; எவரோடும் மரியாதையாக ஊடாடுபவர்; அவரைப்பற்றி நான் உமக்கு அதிகஞ் சொல்லவேண்டியதில்லை; தெய்வபக்தி பூண்டவர், இவைகளெல்லாவற்றைக் காட்டிலும் அவர் உம்மிடத்தில் உண்மையான விசுவாசமுள்ளவரென்பதை, முந்தி அவர் இங்குவந்து இந்த வீட்டிலே தங்கியபோது நான் அவதானித்தேன்; அவரையே நீர் கணவனுக வரித்துக்கொள்ளவேண்டுமென்பது கதிர்காமத்தையனுக்கும் திருவுளச் சம்மதமென்பதை, நீர் சற்று முந்திச் சொன்ன கதிரையாத்திரை வரலாற்றைக்கொண்டு யூகித்தறியலாம். மேலும் என்னிடத்தில் நீர் வைத்திருக்கும் அளவுஅன்பு உம்மிடத்தில் எனக்கில்லையென்பது நிசமானுலும், உம்முடைய நல்வாழ்க்கையை விரும்புபவர்களுள் நானும் ஒருத்தியாவேன்; ஆனதினுல், என் வேண்டுகோளை மறுக்காது நீர் அந்த உத்தம வாலிபருக்கே இல்லாளாக அமையவேண்டும்; அதுதான் எனக்கும் விருப்பம்" என்று பரிந்து கூறினுள்.

### "நடப்பதைக் காண்போம்"

இப்படிச் சொல்லக்கேட்டு மனமுருகியவளாகிய இரஞ்சிதம் அஞ்சுகத்தைஅன்புபெருகநோக்கி,"அக்கா, நீங்கள் என்னிடத்து வைத்துள்ள அன்பிற் பத்திலொன்றுதானும் நான் உங்களிடத்தில் வைத்தேனே என்று சந்தேகப்படுகிறேன்; அப்படியிருக்க நீங்கள் என்மீது வைத்த அன்பு குறைவென்று சொன்ன வார்த்தை என்னுள்ளத்தை உபாதிக்கின்றது; அப்படி இனிமேற் சொல்லாதீர்கள்; நிற்க, என் அருமையான அக்கா, ஒருவருக்கு வாழ்க்கைத் துணையாகவிருக்க நிச்சயித்து அது பூரணமாய் நிறைவேறுவதற்குமுன் விதவையானேன்; இன்னொருவருக்கு இல்லாளாகவொண்ணுதென்ற நியதிகொண்டுதான் பிறந்தவிடம் புகுந்தவிடத்தைவிட்டுப் புறப்பட்டு அலைந்துதிரிந்தேன்; அலைந்து திரிந்தேனுயினும் தீர்த்த யாத்திரை தல யாத்திரை செய்யும் பேற்றைப் பெற்றேன்; அகத்திலில்லையெனினும், புறத்தே துறவிவேடம் பூண்டேன்; கதிரையாண்டவன் தரிசனமும் அவனுடைய அருள் வெள்ளப்பெருக்கில் ஒரு துளியுங் கிடைக்கும் பாக்கியத்தையும் பெற்றேன்; "என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே, உன் செயலேயென் றுணரப்பெற்றேன்" என்று அந்த மகான் பட்டினத்தடிகள் பாடியருளினுரெனினும், அந்த நிலை என்போன்ற உலகப் பற்றுடையவருக்கு வரப்போவதில்லை; ஆனுலும் அவனருளையே நம்பியிருக்கிறேன்; அவன் திருவுளச்செயல் எப்படியென்பதை நாம்அறியோம்; இன்னமும் ஒருவர்க்கு வாழ்க்கைத்துணையாக வேண்டுமென்ற பொல்லா ஊழிருந்தால் நான் அதிற் புகத்தானே வேண்டும் அக்கா, ஆனதனுல் நடப்பதைக் காண்போம்; நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்று கண்களில் நீர் ததும்ப மனமுருகச் சொன்னுள்; அஞ்சுகம் அதற்கு யாதும் பதில் கூறிலள்; அவர்களிருவரும் பின்னரும் சிலநேரம் அளவளாய் வார்த்தையாடியபின் உறங்கினர்.

## முன்னேஸ்வரம் தொண்டர் சபை

சென்ற 26-8-46 இல் ஷெ சபை சிலாபப்பகுதி வைத்திய அதிகாரி டக்ரர் வீ. துரைசாமி அவர்கள் தலைமையில், அன்னுருடைய இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

சபைக்குரிய பிரமாணங்கள் வாசித்து அங்கீகரிக்கப்பட்டபின், பின்வரும் சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டலாயினர்.

போஷகர்: முகாந்திரம் L. M. W. செனுயக்கா, தலைவர்: டக்ரர்: வீ. துரைசுவாமி, உப தலைவர்கள் டக்ரர் K. மகாதேவா, ஸ்ரீ K. கைலாசபிள்ளை: காரியதரிசி: ஸ்ரீ P. கதிரவேலு; தனுதிகாரி: ஸ்ரீ A. தம்பையா, உதவித் தனுதிகாரி ஸ்ரீ K கதிர்காமத்தம்பி, கணக்குப் பரிசோதகர், ஸ்ரீ V. சொக்கலிங்கம்.

இனி நிகழும் உற்சவ காலத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்து நடத்துவதற்கான விஷயங்கள் ஆலோசித்து ஒழுங்கு செய்யப்பட்டன.


—கடித

### 'போய்வருகிருேம்"

அடுத்தநாளாதலும், முதனுட் போல் அஞ்சுகம் அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களனைத்தையுஞ் செய்தாள்: அன்று பிற்பகலாக அவர்களைப் பயணமனுப்புதற்காகிய ஆயத்தங்களைச் செய்தாள்; தனக்குரிய இரதத்தைவிட, இன்னுமொரு இரதத்தைத் தன் வீட்டிற்கு வருவித்தாள்; அவள் விசுவநாதன் விசாலாட்சி இராமச்சந்திரன் இங்கிதம் என்னுமிவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்து என் அருமைத் தங்கையின் கூட்டுறவால் நான் இன்னம் இரு தங்கைமார்களையும் ஆண் சகோதரர்களாகிய இந்த இருவரையும் தரிசிக்கும்பாக்கியம்பெற்றேன்; இன்று தொடக்கம் உயிருள்ளபரியந்தம் உங்களை மறக்க என்னுல் முடியாது; "நல்லாரைக் காண்பதுவும் நன்றே..." என்ற நீதி வாக்கியத்தைப் படித்த பயனை இன்று நான் அடைந்தேன்; உங்களுக்குள் எந்த விசேஷம் எக்காலத்தில் நடந்தாலும், நான் சீவனேடிருக்கும்வரை என்னையும் உங்கள் குடும்பத்தினருள் ஒருத்தியாகப் பாவித்து அன்புவைத்து நடத்துவீர்களெனக் காத்திருக்கிறேன்..." என்று அன்புகூரச் சொல்லிமுடித்து அவர்களனைவரையும் இரண்டு இரதங்களிலும் ஏற்றித் தானும் அவைகளுள் ஒருஇரதத்தில் ஏறிக்கொண்டு வழிவிடுமட்டி புகைரதஸ்தானத்திற்கு உடன்சென்றுள்' அங்கே புகைரதம் வரும்நேரம் சமீபித்தமையினுல், விசுவநாதன் முதலியோர் தமக்கென விடப்பட்ட அறையிலுள்ள பொருள் பண்டங்களையும் எடுத்துக்கொண்டு இராமனையும் உடன்கூட்டிக்கொண்டு புகைரத ஸ்தானத்திலுள்ள மேடையில் நிற்க, புகைரதமும் அங்குவர, பயணப் பண்டங்களுடன் அவர்கள் புகைரதத்தில் ஏறினுர்கள்; புகைவண்டி புறப்படுதலும், அவர்கள் "போய்வருகிருேம்" என்று சொல்ல, அஞ்சுகத்தம்மாள் "சுகமே போய் வாருங்கள்" என்று அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டாள்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எங்கும்
கியாதிபெற்ற
எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும்
உபயோகித்து
ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



மிகச் சிறந்த புதிய **ஆர்மோனியங்கள்**



விலக்கிருக்கின்றன

**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

**கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி,**

484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) (வெ)


## காரைநகர்ச் சைவ மகாசபை

நிகழும் விய வருஷம் ஆவணி மாசம் கஉ ந் திகதி (28 8-46 புதனகிழமை பிற் பகல் 5 மணியளவில் சபை மண்டபத்தில் சபையின் ஆரம்ப காலத்தில் நடைபெற்றது போன்ற சமய வகுப்பு நடத்தப்பட வேண்டுமென வெளியூர் சைவ அன்பர் ஒருவர் கேட்டுக்கொண்ட பிரகாரம், ஓர் விசேஷ ஆரம்பவிழா நடைபெற்றது. அத்தருணம் திரு. ஐ ஆறுமுகம் J P., U. M. அவர்கள் தலைவரா யிருப்ப, தேவாரபாராயணத்துடன் விழா ஆரம்பமாயது. ஆரம்பத்தில் தலைவரவர்கள் இக்காலம் உலகம் போகும் போக்கில் அநேகம் தவறுகளுண்டென்றும், ஆகையால் சமயக்கல்வி கற்பித்து சைவ இளைஞர்களை சமயநெறியில் பாதுகாக்கவேண்டியது சைவ அன்பர்கள் கடமையென்பதாகவும் வற்புறுத்தி உபந்நியாசஞ் செய்தனர்.

பின்னர் உபந்நியாசகர் நியாயதுரந்தரர் திரு அ. அருளம்பலம் அவர்கள் 'சமயக் கல்வி' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு 'சமயம் வாழ்க்கையோடு கலந்துள்ளதென்றும், இதனை வள்ளுவர் கூற்றைக் கொண்டு நாம் நன்கு அறியலாமென்றும், நாம் சைவ சமய உண்மைகளை நன்கு அறியாமையாலேயே அநேகம்பிழைகள் மலிந்துள்ள கிரியைகளைச் செய்கின்றோமென்றும் அவற்றைத் திருத்த சமய வகுப்பு அத்தியாவசிகமென்றும், இப்படியான வகுப்புகள் எங்கும் பரவி முன்னேற்ற வழியில் தொண்டு புரிதல் வேண்டுமென்றும், சைவமதத்துள் ஏனைய சமயங்களில் இல்லாத பல உண்மைகள் இருந்தும் அவற்றை நாம் அறியாது இருப்பது எவ்வளவு அவமானம் அறியாமையென்றும் நீண்டதோர் சிறந்த உபந்நியாசஞ் செய்தனர்.

அதன்பின்னர் சமயவகுப்பு ஆசிரியர் ஸ்ரீமத் சி சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் குறிப்புரையுடன் வந்தனோபசாரங் கூறியதும் தேவார பாராயணத்துடன் ஆரம்பவிழா இனிது நிறைவேறியது.

ஈற்றில் சமயவகுப்பு ஆரம்பிக்கப் பெற்றது.

(கடிதம்)


## ஜீவாதார வைத்திய விளம்பரம்

காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரை
மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை

ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பைத்தியம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
புதுக்கோவிலடி, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11 46)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### வெள்ளி செப்டம்பர் 6

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 எஸ் கிட்டம்மாள பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கிட்டம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 எஸ் கிட்டம்மாள் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45முடிவு

மாலை: 5 எஸ் அபிராமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 5.40 குராலைஸ்ரீ விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள 7 இருகுரல் இசை 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில்செய்திகள் 7-45 எஸ் அபிராமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 8-30 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 9 ஆங்கிலத்தில செய்திகள் 9-15 டி என் பரிபூரணந்தம் பாட்டு 9.30லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக வைகாரங்கள 10 இசைச்சுவை 10 30 முடிவு.

### சனி செப் 7

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வி என் பாலசுப்பிரமணியம் பாட்டு 8 30 சித்ரகானம் 9 முடிவு

1 வேதாரண்யம் என் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 1:30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வசாசாலைசங்கு 2 தமிழில் செய்திகள் 2 05 பி எஸ் லலிதாபாய் பாட்டு 2 45 முடிவு.

மாலை: 5 பி எஸ் லலிதாபாய் பாட்டு 5-40 இயற்பா விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10அறிவிப்புகள 6-15கிராம நிகழ்ச்சிகள் 7 வி என் பாலசுப்ரமணியம பாட்டு 7-15 சகலரின் மதம் 7.30தமிழில் செய்திகள் 7-45 மதராஸிலிருந்து உள்ளபடி (டி பிருந்தா டி முக்தா பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள 9-15 எம் என நடராஜபிள்ளை புல்லாங்குழல் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-30முடிவு.

### ஞாயிறு செப் 8

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எஸ் சாவித்திரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கோவையியா வாத்யகோஷ்டி 8-30 டி பி கே நாகரத்னம்மாள் புல்லாங்குழல் 9 முடிவு.

12 கதம்பம் 12.30 இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட் 12.45 மகிழம்பூ 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1.40 ரேண்வலகம் 2 தமிழில் செய்திகள் 2-5 மின்னிசை 2-20 நீங்கள் கேட்டவை 3 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 திருச்சி எஸ் சுவாமிநாதய்யர் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எஸ் சாவித்திரி பாட்டு 7.15 சேவைக்கு வரம்பு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மாயவரம் கோபாலகிருஷ்ண ஐயர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தர்க்கப்பாட்டுகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 திருச்சி எஸ் சுவாமிநாதய்யர்பாட்டு 10.30 முடிவு

### திங்கள் செப் 9

காலை 7.15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 உப்பிலியப்பன்கோயில் ஏ பி சின்னத்தம்பிபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடல்கள் 8.40 வி எஸ் சீதாராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் கங்காபாகீரதி, எஸ் யமுனாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் கங்காபாகீரதி, எஸ் யமுனாபாய் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 உப்பிலியப்பன் கோயில் ஏ பி சின்னத்தம்பிபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சூர்யகுமாரி 7-15 தாளவாத்ய கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7.45 டி கே ரங்காச்சாரி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9.20 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10 30 ஒலிபரப்பு முடிவு

### செவ்வாய் செப் 10

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குரல்வகை 8.30 திருச்சூர் எம் லட்சுமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருச்சூர் எம் லக்ஷ்மி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 ஆர் பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 ரேடியோ அறிமுகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சந்திப்பு 8 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 8.30 ஆர் பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 எல் கணபதியாபிள்ளை, டி எஸ் வைத்தியநாதன் இருவர் வீணைகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10.30 ஒலிபரப்பு முடிவு.


## குடைமார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

### கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினால் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினால் உடையாது. மழையினால் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனாவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'
ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3— 12-9(வெ)



## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சிசாமாலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 27 26 4-46—25-10-46 (வெ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday September, 6, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org